நெல்லை தீபம்


2010

J/Nelliady Madhya Maha Vidyalayam
O.S.A Canada

யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
J/NELLIADY MADHYA MAHA VIDYALAYAM
O.S.A. CANDADA

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலய
பழைய மாணவர் சங்கம் – கனடா

www.nmmv.ca



வீடு, வியாபார நிலையங்கள் வாங்க விற்க

ஞானேந்திரன் நரசிங்கம்
416.937.8090

ஜூடி ஞானேந்திரன்
416.629.9797

Sales Representatives

HOMELIFE GTA REALTY INC., 1711 MCCOWAN RD. SUITE # 206, TORONTO, ON. M1S 3Y3, OFFICE: 416.321.6969

*EACH OFFICE IS INDEPENDENTLY OWNED AND OPERATED

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய
பழைய மாணவர் சங்கம் – கனடா

பெருமையுடன் வழங்கும்

நெல்லை தீபம் – 2010
பல்சுவைக் கலைவிழா

பிரதமவிருந்தினர்

பொன் பாலராஜன் Msc
கணனி கட்டமைப் துறையியல் முதுமானி
ஒன்ராறியோ அரசகூட்டுத்த்தாபனமான டுஊடீமு வில்
கணனி கட்டமைப் துறை நிபுணத்துவ ஆலோசகர்
சென்ரனியல் (Centennial)கல்லூரி உயர் தொழில்நுட்ப பாடநெறிப்பாடத்திட்ட வகுப்பாளர்
"டிவ்றாய்" (DeVry) உயர் தொழில் நுட்பக்கல்லூரின் முன்னாள் விரிவுரையாளர்

Saturday, October 16th, 2010 மாலை 5:00 மணி

இடம்: Bur Oak Secondary School, 933 Bur Oak Ave, Markham

Web: nmmv.ca

Email: nmmv.canada@gmail.com

தமிழ்த்தாய் வணக்கம்

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

கனேடிய தேசிய கீதம்

ஓ கனடா! எங்கள் வீடும் நாடும் நீ!
உந்தன் மைந்தர்கள் உண்மைத் தேச பக்தர்கள்!
நேரிய வடக்காய், வலுவாய், இயல்பாய்
நீ எழல் கண்டுவப்போம்!

எங்கு உள்ள நாம் ஓ கனடா
நின்னைப் போற்றி அணிவகுத்தோம்!
எம்நிலப் புகழைச்சுதந்திரத்தை
என்றும் இறைவன் காத்திடுக!

ஓ கனடா, நாம் நின்னைப் போற்றி அணிவகுத்தோம்!
ஓ கனடா, நாம் நின்னைப் போற்றி அணிவகுத்தோம்!

ஓ கனடா! எங்கள் வீடும் நாடும் நீ!

பாடசாலைக்கீதம்

இராகம்: சிம்ஹானந்தப்பிரியா
தாளம்: ஏகம்

இயற்றியவர்: பண்டிதர் வீரகத்தி
மெட்டமைப்பு: சங்கீத பூஷணம் திரு. கார்த்திகேசு

பல்லவி

வாழ்க வாழ்க வாழ்கவே- எங்கள்
கலைக் கோயில் என்றும் (வாழ்க)

அனுபல்லவி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
நிகரில்லாத கலையின் ஊற்று குருகுலபீடம் (வாழ்க)

சரணம்

கண்விழித்த கமலமன்ன கவர்ச்சிபொங்கு பார்வையும்
கனல் தெறித்த வீறு கொள்ளும் ஆண்மை ஓங்கு நெஞ்சமும்
எண்ணிலாத இலட்சியங்கள் சூழும் இதய வேகமும்
விண் முகட்டிற் பாயவைக்கும் விந்தை அறிவு நிலையமாய் (வாழ்க)

இன்ப வாழ்வு பூக்கும் வண்ணம் இனிய கலை விஞ்ஞானமும்
என்றும் எங்கும் உண்மை காணும் பேறுகொள் மெய்ஞ்ஞானமும்
அன்பினாலே வெற்றியீட்டும் அரிய பண்பு நெறிகளும்
ஆக்கி எம்மில் ஆற்றல் ஏற்றும் அறிவு நீர் வீழ்ச்சியாய் (வாழ்க)

கல்விப் பண்ணை வளரநாளும் களைபிடுங்கி அறிவுநீர்
மெல்ல மெல்ல சொரிந்து நிற்கும் மேன்மை மிக்க குரவர்கள்
செல்வம் என்று போற்றும் எங்கள் உயிரில் வாழும் செந்தமிழ்
அல்லல் நீக்கி ஆட்சி காண அருள் வழங்கு வாணியாய் (வாழ்க)

என்பும் உரியர் பிறர்க்கு என்ற இனிய கொள்கை அழகிலே
அன்பு நெறியில் பணிகள் ஆற்றி அருமைத் தமிழின் நிழலிலே
தென்பு பெற்று தெய்வ ஒளியில் திசை கடந்த புகழிலே
இன்பம் காட்டும் வாழ்வு நல்கும் இணையில் சாந்தி நிலையமாய் (வாழ்க)

வைத்தகாலைப் பின்வையாமல் வாழ்விலே முன்னேறுவோம்
வைய வாழ்வு சொர்க்கம் என்று வாகை சூடிக் கூறுவோம்
நித்தம் எம்மைக் காக்க என்று நிமலன் பாதம் சூடுவோம்
அத்தன் கருணை வெள்ளம் மூழ்கி அமரகீதம் பாடுவோம்!
அமரகீதம் பாடுவோம்! அமரகீதம் பாடுவோம்!

தலைவர் செய்தி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் – கனடா
Nelliady Madhya Maha Vidyalayam Old Students Association – Canada
(இலாப நோக்கமற்ற அமைப்பு A Registered Non-Profit Organization ON Reg. OCN No. 1746090)
19 Canmore Blvd, Scarborough, ON M1C 3T3
www.nmmv.ca nmmv.canada@gmail.com

எம் இனிய உறவுகளே,

தொடர்ந்து நாலாவது 'நெல்லை தீபம்-2010' உங்கள் கரங்களில் தவழ்கிறது. மேலும் எமது செல்வங்களின் சிறப்புமிகு கலை நிகழ்ச்சிகளும் அரங்கேறுகின்றன என்பதில் அகமகிழ்ச்சி.

எங்கள் கலைக் கோவில் ஆரம்பிக்கப்பட்டு தொண்ணூறாவது ஆண்டு பூர்த்தியாவதையிட்டு விசேடமாகக் கொண்டாடுவதற்கு அங்கேயுள்ள நிருவாகமும், பழைய மாணவர், பெற்றார் சங்கங்களும் தீர்மானித்திருக்கிறார்கள் என்பதைக் கேள்வியுற்று மிக்க மகிழ்ச்சி அடைந்தோம். அனைத்தும் இனிதே நிறைவு பெற எங்களுடைய கணிசமான பங்களிப்பை நல்குவதற்கு முன்நிற்பதோடு எமது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறோம்.

எமது சங்கம் 2008 ம் ஆண்டிலிருந்து இன்றுவரை பன்னீராயிரம் கனேடியன் டொலர்களைக் கல்லூரிக்கு வழங்கியுள்ளது. எமது நிதிமூலம் கல்லூரிப் பான்ட் வாத்தியக் கருவிகள், ஐந்தே முக்கால் லட்சம் ரூபாய் பெறுமதியான ஒளிப்பிரதி எந்திரம், மூன்று ஊழியர்களுக்கான நாலு வருட ஊழியம் என்பன கல்லூரிக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவற்றைவிட, பிரத்தியேகமாக ஒரு சில பெரும் உள்ளங்களிடமிருந்து பணம் திரட்டி, வன்னிப்போரினாலே பாதிக்கப்பட்ட மூன்று மாணவருக்குரிய ஒரு வருடப் பல்கலைக்கழகப் படிப்புச்செலவை அனுப்பியுள்ளோம்.

மேலும், வடக்குக் கிழக்குக் கல்லூரிகளின் துரித அபிவிருத்திக்காக உலக வங்கி ஆறு பில்லியன் ரூபா நிதி உதவியை உதவ முன் வந்துள்ளதாக அறி கிறோம். ஒவ்வொரு வலயத்துக்குமுரிய ஐந்து,ஆறு பாடசாலைகளுள் எமது பாடசா லையும் அடங்கும் என்று நம்புகிறோம். அதற்காகப் பிரார்த்திக்கிறோம்.

எமது நடப்பு வருட நிருவாகக் குழு சிறந்த ஒரு குடும்பமாக இயங்கி வேலைப்பழுவே தெரியாமல் திட்டமிடல், செயல்பாடுகள் என்பவை நடைபெற்று வந்துள்ளன. இதுவரையில் எமது சங்கம் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது. இன்னும் புலமைப் பரிசில் பெற்ற மாணவர் உட்படப் பல பழைய மாணவர் எம்முடன் இணைந்தால் நாம் மேலும் திறம்பட அதிகமான ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபட முடியும் என்பது மட்டுமன்றி நாம் ஒரு பாரிய வலுமிக்க சக்தியாகவும் இயங்கி பல சாதனைகளை நிலைநாட்ட முடியும் என்பது உறுதி. எம்முடன் இதுவரை இணையாத பழைய மாணவர்களே இதனை உணர்ந்து கொள்வீர்களாக!

வைத்த காலைப் பின்வையாமல் வாழ்விலே முன்னேறுவோம்!
வைய வாழ்வு சொர்க்கம் என்று வாகை சூடிக் கூடுவோம்!!

உங்கள் அன்பின்,

Sutton

Courtier Immobilier Agréé
groupe sutton-performer inc.

Pushpanantham Kathiresu
(Pushpan)
Agent immobilier affilié

உங்கள் கனவு
ஒரு அழகிய இல்லம்...
அதை வாங்கித்தருவதே
எனது கடமை





மொன்றியலில் அனைவருக்கும்
அறிமுகமான முகவர்

அழையுங்கள் புஸ்ப்பன்

514-952-7047

123, Place Frontenac, Pointe-Claire, QC, H9R 4Z7

Bur: 514-426-9595 Fax: 514-426-9596

pkathiresu@sutton.com www.suttonquebec.com

செயலாளர் செய்தி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் – கனடா
Nelliady Madhya Maha Vidyalayam Old Students Association – Canada
(இலாப நோக்கமற்ற அமைப்பு A Registered Non-Profit Organization ON Reg. OCN No. 1746090)
19 Canmore Blvd, Scarborough, ON M1C 3T3
www.nmmv.ca nmmv.canada@gmail.com

'நெல்லைத்தீபம்-04' கலை நிகழ்வு நெ. ம. ம. வித்தியாலய பழைய மாணவர்களையும், அவர்களின் வாரிசுகளையும், பாடசாலை வளர்ச்சியில் அக்கறையுடைய நலன்விரும்பிகளையும்,பெரியோர்களையும் இணைக்கும் ஒரு ஒளிக்கீற்றாய் இருப்பதையிட்டு மகிழ்ச்சியும், கடந்த காலத்தின் ஆதரவிற்கு நன்றி.

தாயக நினைவுகளை மீட்கவும், தமிழ் மொழியின் தொன்மையைப்பேணவும், இயல்,இசை, நாடகம் என்ற கலை வடிவங்களினால் ஊக்கப்படுத்தி வருகின்றோம். கோடைகாலங்களில் ஒன்று கூடலும் விளையாட்டுப் போட்டிகளையும் ஏற்பாடு செய்து அதன்மூலம் ஓற்றுமையையும் நட்புறவையும் பெருக்கி வருகின்றோம்.

பாடசாலையின் தேவையின் பொருட்டு அதிபரினால் விடுக்கப்படும் கோரிக்கைகளை ஓரளவு பூர்த்தி செய்து வருகின்றோம்.

இன்றைய கலை நிகழ்ச்சிகளுக்கு சிறப்புச் சேர்த்த இளைய கலைஞர்களை வாழ்த்துவதுடன் மூத்தகலைஞர்களைப் பாராட்டுகின்றோம்.

'நெல்லைத்தீபம்-04' பலருக்கு விளம்பர உதவி, கட்டுரையாக்கம், புகைப்படம் எடுத்தல், அச்சுப்பொறித்தல் ஆகியவற்றிற்கு உதவியவர்களுக்கு நன்றி.

கலை நிகழ்ச்சியின்போது ஒலி ஒளி அமைப்பு, வீடியோ எடுத்தல், அச்சுப்பொறித்தல், ஆகியவற்றிற்கு உதவியவர்களுக்கு நன்றி. சிற்றுண்டிச்சாலையை பொறுப்பேற்று நடாத்திய நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும், கலை நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்திய கலைச் செயலாளர் திரு. என். ஞானேந்திரன், நிதிச்செயலாளர் திரு. கே. வர்ணகுமாரன் அவர்களுக்கும், பல்வகையில் உதவிய அனைத்து நண்பர்களுக்கும் நிர்வாக சபையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'ஒற்றுமையே பலம்'

திரு. க. குலராஜேந்திரன்
செயற்குழு,
நெ. ம.ம.வி.
பழையமாணவர் சங்கம். கனடா.

J/NELLIADY MADHYA MAHA VIDYALAYAM
KARAVEDDY, SRI LANKA
Established in 1921
T.P.No : 021-226 3017
021-226 4141
Fax : 021-226 3017
Principal.
Mr.S.Sethurajah. SLPS -I
B.A., Dip.in.Ed., PGDEM, M.Sc.(Ed.Mgt.), M.Phil.(Ed.)
Deputy Principal
Mr.A.Ariyaratnam.
B.A.(Hons),Dip.in.Ed.

கல்லூரி அதிபரின் வாழ்த்துக்கள்!

உலகெலாம் பரந்து சிறப்புற்றிருக்கும் புதல்வர்களையும் புதல்விகளையும் உருவாக்கி மேன்மைகண்ட யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் கனடா வாழ் பழைய மாணவர்களால் வருடாவருடம் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒன்றுகூடல் நிகழ்விற்கும் "நெல்லைத்தீபம்" மலர் வெளியீட்டுக்கும் வாழ்த்துரை வழங்குவதில் மட்டில்லா மகிழ்வடைகின்றேன். இந்த ஒன்றுகூடலும் மலர் வெளியீடும் கல்லூரித் தாய் மீதான உணர்வுகளை வெளிப்படுத்தவும் கல்லூரி மைந்தர்களிடையே உறவுகளை வலுப்படுத்தவும் உதவுமென நம்புகிறேன். "தரமான கல்வியின்மூலம் தரமான சமூகம்" என்னும் இன்றைய கல்வி இலக்கை எய்துவதற்குப் பாடசாலைகளுக்கு வலுவான பாடசாலைச் சமூகம் அமையவேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகளின் அதீத அக்கறையுள்ள பாடசாலைகளே இன்று இலங்கையில் சகல துறைகளிலும் மேம்பட்டுள்ளன.

எமது கல்லூரியைப் பொறுத்தளவிலும் அண்மைக்காலங்களில் பழைய மாணவர் சங்கத்தின் உதவிகளும் ஒத்தாசைகளும் திருப்தி தரும் வகையிலமைந்துள்ளன. குறிப்பாகப் பழைய மாணவர் சங்கத்தின் கனடா கிளையினரான தங்களது உதவிகளால் கல்லூரி பல நன்மைகளைப் பெற்று வருகின்றது. கல்விசாரா ஊழியர்களுக்கான வேதனங்கள் வழங்கப்படுகின்றமை, அண்மையில் வழங்கப்பட்ட ஐந்தே முக்கால் இலட்சம் பெறுமதிமிக்க பிரதிபண்ணும் அச்சியந்திரம் என்பன இவற்றுக்கு உதாரணங்களாகும். எதிர்காலத்திலும் இதுபோன்ற பல உதவிகளைக் கல்லூரி தங்களிடம் எதிர்பார்த்திருக்கின்றது. எண்ணியது எண்ணியபடி நடக்குமாயின் இக்கல்லூரியானது எதிர்வரும் ஒருசில ஆண்டுகளில் தன்னிறைவு பெற்ற ஒரு தலைசிறந்த கல்லூரியாகத் தலைநிமிர்ந்து நிற்கும் என்பது நிச்சயம்.

2011ஆம் ஆண்டு நமது கல்லூரியானது தனது 90 ஆவது அகவையினைப் பூர்த்தி செய்கின்றது. இவ்வாண்டினை கல்லூரிக்கான ஒரு விழிப்புணர்வு ஆண்டாகக் கொண்டாடக் கல்லூரிச் சமூகம் தீர்மானித்துள்ளது. சிறப்பாகப் புலம்பெயர்ந்த நாடுகளில் வதியும் உறவுகளின் வரவினையும் பங்களிப்புக்களையும் பங்குபற்றலையும் எதிர்பார்த்து 2011ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மூன்று நாள் செயற்றிட்டமாக இதனைச் சிறப்புற நடத்தலாம் என ஆலோசிக்கப்பட்டுள்ளது. இவ்விடயத்தினைத் தங்களுக்கு மகிழ்ச்சியுடன் சமர்ப்பிப்பதுடன் இது தொடர்பான தங்களது ஆலோசனைகளை வேண்டி, தங்களது இவ்வருட ஒன்றுகூடலும் மலர் வெளியீடும் சிறப்புற வாழ்த்துகிறேன்.

திரு.சேதுராஜா
அதிபர்

CHOLA CATERER'S

We do cater all kind of occasions

உங்கள் இல்லங்களில் நடைபெறும்
எந்த வைபவமானாலும்
தரமான பொருட்களைக் கொண்டு
தாயகத்துச் சுவையில் சுடச்சுட
அறுசுவை உணவுகளை
உங்கள் இல்லத்திற்கே
கொண்டு வந்து தருகின்றோம்

Now introducing Indian Hakka Chinese Food
&
North Indian Food available.

Web: www.cholacaterers.ca



Call: Gobi
Tel: 416 288-9339

1217 Ellesmere Rd
Scarborough, ON
(Midland & Ellesmere)
M1P 2Y5



J/NELLIADY MADHYA MAHA VIDYALAYAM

KARAVEDDY, SRI LANKA

Established in 1921

T.P.No : 021-226 3017
021-226 4141
Fax : 021-226 3017

Principal.
Mr.S.Sethurajah. SLPS -I
B.A., Dip.in.Ed., PGDEM, M.Sc.(Ed.Mgt.), M.Phil.(Ed.)

Deputy Principal
Mr.A.Ariyaratnam.
B.A.(Hons),Dip.in.Ed.

2010.07.29

தலைவர்/செயலாளர்,
பழைய மாணவர் சங்கம் - கனடா கிளை,
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

டிஜிடல் பிரதி செய்யும் இயந்திரம் [*Digital Duplicator Machine*] **அன்பளிப்பு.**

நமது பாடசாலையின் பரீட்சைத் தேவைகளுக்காக தங்களால் வழங்கப்பட்ட நிதியின் மூலம் கல்லூரியின் பழைய மாணவர் தாய்ச் சங்கத்தினால் கொள்வனவு செய்து அன்பளிப்புச் செய்யப்பட்ட ஐந்து இலட்சத்து எழுபதாயிரம் (ரூபா. 570,000/-) பெறுமதியான டிஜிடல் பிரதி செய்யும் இயந்திரம் *2010.07.23* அன்று கிடைக்கப் பெற்றது என்பதனைத் தங்களுக்கு மகிழ்ச்சியோடு அறியத் தருவதுடன் காலம் கருதி தங்களால்செய்யப்பட்ட இவ்வுதவியின் மூலம இவ்வருடத்திற்கான இரண்டாந் தவணைப் பரீட்சையைச் சிறப்பாக முன்னெடுக்க முடிந்தது என்பதனையும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன். நமது பாடசாலையின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களுக்கு தோள் கொடுத்துத் துணை நிற்பீர்கள் என்ற நம்பிக்கை இதன்மூலம் வலுப் பெற்றுள்ளது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதிபர்


NEW FORMULA
DIESEL MAX
Mother Nature's Fuel
Husky
Corner Store
OLG
ATM
country style
எங்கள் கல்வி தாயின் கலைக்கூடம் யாழ் நெல்லியடி
மத்திய மகா வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காக கனடா
வாழ் பழைய மாணவர் சங்கம் நடாத்தும் நெல்லை தீபம் 2010
வெற்றி நடை போட எங்கள் வாழ்த்துக்கள்
Husky
Your new best friend in southern Ontario.
Balakumaran Thiraviam
(Kannan)
Sweet River Husky
3191 Rutherford Rd.
Concord, ON L4K 0A3
hk6112@popmail.huskyenergy.ca
905 738 8535
Husky
Vanathy Balakumaran
Birchmount Husky
3600 Finch Ave E.
Scarborough, ON M1W 3N7
hk4121@popmail.huskyenergy.ca
416 494 4904
Husky
neighbourhood gas stations.

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
பழைய மாணவர் சங்கம்

திரு.இ.ஐயாத்துரை
தலைவர்

திரு.வீ.சுதர்சன்
செயலாளர்

திரு.க.ஸ்ரீஸ்குமார்
பொருளாளர்

நாமெல்லாம் வாழ்வாங்கு வாழ வழிகாட்டிய நமது கல்லூரித்தாயின் கனடாவாழ் மூத்த புதல்வர்களான தாங்கள் அனைவரும் ஒன்றுகூடும் இவ்வேளையில் நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகிறோம். நமது கல்லூரி உதயமாகி ஒன்பது தசாப்தங்கள் எதிர்வரும் 2011 ஆம் ஆண்டில் நிறைவடையவுள்ளன. இந் நீண்ட வரலாற்றுப் பாதையில் கல்லூரி சந்தித்த வளர்ச்சிப் படிநிலைகளும் இறங்குமுக நிலைகளும் ஏராளம். எது எவ்வாறிருப்பினும் நமது கல்லூரியின் இன்றைய நிலை பலரும் விதந்து பாராட்டும் வகையில் சிறப்பானதாகவே காணப்படுகின்றது. கல்வி அடைவுகளிலும் பௌதிக வள விருத்தியிலும் கடந்தகாலங்களில் ஏற்பட்டிருந்த நலிவுகளிலிருந்து துடிப்புடன் மீண்டெழுந்து வரும் இன்றைய நிலைக்கு கல்லூரியின் அதிபர் அவர்களது சிறந்த முகாமைத்துவ நடவடிக்கைகளும் நேர்சிந்தனையுடன் ஒத்துழைத்து வரும் கல்லூரிச்சமூகத்தின் செயற்பாடுகளுமே காரணமாகும்.


இந்த வகையில் கனடாவில் வதியும் பழைய மாணவர்களான தங்களனைவரதும் பங்களிப்புக்கள் அண்மைக்காலங்களில் மிகச் சிறப்பானதாகவுள்ளமை பாராட்டத்தக்கது. தங்களது உதவியால் கிட்டிய "பாண்ட்" வாத்தியக் கருவிகள், முகாமைத்துவ ஆளணியினருக்கான வேதனக் கொடுப்பனவுகள், டிஜிட்டல் அச்சியந்திரம் [Digital Duplicator Machine] போன்றன கல்லூரியின் நடவடிக்கைகளை சிறப்பானதாக முன்னெடுப்பதற்கு மிகவும் உறுதுணையாக அமைந்துள்ளமையை அவதானிக்கமுடிகிறது. ஏதிர்வரும் 2011ஆம் ஆண்டு கல்லூரியின் 90 ஆண்டுகள் நிறைவை மிகச் சிறப்பாக அனுஷ்டிப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் கல்லூரியின் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவுசெய்வதற்கு ஆவன செய்யவேண்டும் எனத் தங்களனைவரையும் உரிமையோடு கேட்டுக்கொள்வதோடு அடுத்த ஆண்டில் தாங்களனைவரும் இங்கு வருகைதந்து ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்களில் பங்குகொண்டு சிறப்பிக்கவேண்டும் எனவும் அன்போடு அழைக்கின்றோம்.

"நெல்லைத்தீபம் - 2010" சுடர்விட்டுப் பிரகாசிக்க வாழ்த்துகிறோம்.

"வைத்த காலைப் பின்வையாமல் வாழ்விலே முன்னேறுவோம்"

நன்றி.

இ.ஐயாத்துரை
தலைவர்,
பழைய மாணவர் சங்கம்.


Geethams
Banquet Services
We offer the quality and expertise to make your special event a unique and memorable one.
We offer custom designed services for the following events:
Wedding · Engagement · Anniversary · Birthday · Puberty Ceremony
Corporate Function · Semi-Formal · and Many More !
Contact :
Abi Jegan | 647-962-3475 | info@geethamsbanquet.com | www.geethamsbanquet.com


Rainbow Photography
Portarit
* Wedding
* puberty ceremony
* Birthday
* Other Event
* Fashon
* Product Photo
Contact
Baskaran
Direct: 416 744 6998
Cell: 416 371 9201
Email: baskaran14@hotmail.com


Buy & Sell
Residential and Commercial Properties
416-726-8055
CALL NOW
Raj. A. Rasaratnam B.Com.
Sales Representative
YOU CAN WIN
1st PRIZE
NEW 2010 BMW 3 Series
2nd PRIZE
WIN a TRIP for 2 to CUBA
3rd PRIZE
46" flat Screen TV
HOW? Buy or sell any property with my help to enter the draw! Don't miss your chance on these wonderful prizes!
** Some terms and conditions apply
HOMELIFE
HIGHER STANDARDS
Mortgage arrangement, Business incorporation and corporate tax preparation.
HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
*Independently owned and operated
Bus: (416) 321-6969 Fax: (416) 321-6963
1711 McCowan Rd., Suite #206,
Scarborough, ON. M1S 3Y3



நிற்பவர்கள்: இடம் இருந்து வலம்:

திரு.க.வர்ணகுமாரன் திரு.ந.ஞானேந்திரன், திரு.தி.கணபதிப்பிள்ளை, திருமதி.யோ.தமயந்தி, திருமதி.சி.நளினி, திருமதி.ம.புஸ்பலதா, திரு.ச.விநாயகமூர்த்தி, திரு.ச.தயாபரன்

இருப்பவர்கள்-இடம் இருந்து வலம்:

திரு.பு.ராஜ்மோகன், திரு.சு.ரவீந்திரன், திரு.ந.திரவியம், திரு.சி.அம்பிகாவரன், திரு.க.குலராஜேந்திரன், திரு.கா.காந்தரூபன்

படத்தில் விடுபட்ட அங்கத்தவர்

திருமதி.பா.சிவாஜினி, திரு.வீ.சோதிநாதன், திரு.தா.செல்வரத்தினம்

நிகழ்ச்சி நிரல்

விளக்கேற்றுதல்
தமிழ்த் தாய் வாழ்த்து
கனடிய தேசிய கொடியேற்றுதல்
கனடிய தேசிய கீதம்
தமிழ் ஈழம் கொடியேற்றுதல்
தமிழ் தேசிய கீதம்
பாடசாலைக் கொடியேற்றுதல்
பாடசாலைக் கீதம்
மௌன அஞ்சலி

வரவேற்பு நடனம் (புக்ஷ்பாஞ்சலி)
கர்நாடக சங்கீதம்
பரதநாட்டியம் (கோலாட்டம்)
நகைச்சுவை நாடகம் (facebook.com)
தலைவர் உரை
திரைப்பட பாடல் நடனம் (கலக்கல்)
பேச்சு

இடைவேளை

இசை நிகழ்ச்சி (ஏலுமென்றால் பாடு)
பிரதம விருந்தினர் உரை
CMR கலைஞர்களின் நகைச்சுவை கதம்பம்
நகைச்சுவை கதம்பம்
சிவன் பார்வதி நடனம்
திரைப்பட பாடல்களின் கலக்கல் நடனம்


Children Education Trust of Canada
offered to the public by
CHILDREN'S EDUCATION FUNDS INC.
குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம் - கனடா
Depository
Scotia Bank
Trustee
The Bank Of
Nova Scotia
Trust Company
Investment Advisors
Scotia McLeod
T.D.Waterhouse
CIBC Wood Gundy
Fiera Capital
For More Information
Please Contact S.V.Moorthy
Res: 416-335-6553
Cell: 416-508-0370
Fax: 416-335-7807
Email: SVMoorthy23@yahoo.com


இந்து கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம்
பூப்புனித நீராட்டு விழா
பரத நாட்டிய அரங்கேற்றம்
பிறந்த தின விழாவிற்கான
தலை முக அலங்காரங்கள்
சடைநாகம், மணமாலைகள், ஆண்டாள்மாலை என்பனவும்
Veil (Gold& White) பெற்றுக்கொள்ளலாம்
BRIDAL DRESSING
&
HAIR STYLING
Thaya (Mrs. Moorthy)
Tel: 416.335.6553, Cel: 647.292.6553
எங்களிடம் மணப்பெண்ணிற்கான
பூச்செண்டு, (Bouquet), பூக்கூடைகள்
(Flower Girl's Baskets),
அரக்குதலைநகை செற்
என்பவற்றை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்


19வது ஆண்டில் கால்பதிக்கும்
AIR LINK
Travel Ltd.
AIR FRANCE
JET AIRWAYS
KOREAN AIR
ETIHAD
KUWAIT AIRWAYS
AIR CANADA
SINGAPORE AIRLINES
QATAR
Emirates
KLM
CATHAY PACIFIC
SriLankan
இன்னும் பல விமான நிறுவனங்களுடாக.....
எங்கள் அனுபவம்
உங்கள் பிரயாணத்தை இலகுவாக்குகிறது.
Holiday Packages
Honeymoon Packages
Vacations
Hotel Booking
Tel: 416-292-6200
5200 Finch Ave. E, Suite 115, Toronto, ON M1S 4Z4
Email: sales@airlinktravel.ca - www.airlinktravel.ca
TICO
IATA

Kavin Home Foods

Premium Quality

fresh home style food products

எல்லா வகையான உடன் மரக்கறிகள்,பழவகைகள் மற்றும் கிழங்குவகைகள்

ஆகியவற்றின் உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் மொத்த விற்பனையாளர்கள்

Fresh Fruits, Vegetables & Yam
Growers, Exporters & Wholesalers



BALA IMPEX
Stand 77 Market Pavilion
1 Sherrin Road,Leyton
London, E10 5SQ
United Kingdom
Tel: 020 8558 5874
Email: kk@london.com

FRESH HOME FOODS
Scarborough, ON.
Canada, M1B 1Y9
Tel: 416.291.7755
web: www.kkgroupsinc.com

SRIGHAN FARMS (GH) LTD
P.O.BOX: AJI-117
Adoagyiri.Nsawam
Ghana,West Africa
00233 2141 2685
srighan@kkgroupsinc.com



பழைய நினைவுகள்











Nelliady Madya Maha Vidyalayam Alumini Association - UK

3 Croydon Lane, Banstead Surrey SM7 3AS, www.nmmv.co.uk

Message from the President of NMMV (AA) UK



On behalf of NMMVAA UK, it gives me great pleasure to send my best wishes to the NMMV OSA Canada in holding Nellai Theepam on 16th October 2010. It is wonderful to hear that such events are being held in honour of our school to enhance its facilities. I am sure the funds raised from this event will come to great use in the school's future development and it must be satisfactory for them to hear that they have not been forgotten by their alumni.


I am aware that NMMV OSA Canada has donated to various aspects of the school and in particular has donated a printer, which I hear is a great benefit to the school. I hope both the UK and Canadian committee continue to work hard and provide for the present and future students of NMMV, which is now the top school in Vadamarachi. Both committees working together will ensure that our school grows to greater heights in the years to come.

On a final note I would like to congratulate NMMV OSA Canada for all they have done for NMMV.

S. Yoganathan
President
NMMVAA UK

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய
கோடைகால நிகழ்வுகள்







புற்றுநோய் ஓர் எளிய அறிமுகம்

வைத்திய கலாநிதி இ. மாலவன்

'புற்றுநோய' என்னும் பதமானது ஓர் நோய்த்தொகுதியைக் குறிப்பிடப் பயன்படுவது. இங்கு மாற்றம் பெற்ற கலங்களின் கட்டுப்பாடின்றிய பெருக்கமானது நிகழும். மேலும் இக் கலங்கள் வேறுபகுதிகளுக்குஊடுருவும் திறனை காலப்போக்கில் அடைகின்றன.

புற்றுநோய் என்னும் பதத்தால் குறிப்பிடப்படுவது ஓரு இயல்பைக் கொண்ட பல நோய்களின் தொகுதி. பெரும்பாலானவை அவை பாதிக்கும் பகுதியினைப் பொறுத்து பெயரிடப்படும். உதாரணமாக இரைப்பையினைப் பாதிப்பது இரைப்பைப் புற்று நோய்.

புற்றுநோய்களை நாங்கள் மேலெழுந்தவாரியாக தொகுதிகளினுட் குறிப்பிடலாம்.

காசினோமா (Carcinoma) – மேற்பரப்பை மூடும் கலங்களிலிருந்து உருவாவது.
சார்கோமா (sarcoma) – இணை இணையங்களிலிருந்து தோன்றுவது.
லூக்கேமியா (Leucemia) – இரத்தத்திலிருக்கும் கலங்களை உருவாக்கும் பகுதிகளிலிருந்து தோன்றுவது.
லிம்போமா (Lymphoma) – நிணநீர் தொகுதிக் கலங்களிலிருந்து தோன்றுவது.

புற்றுநோயின் தோன்றல்:

கலமானது மனித உடலின் அடிப்படை அலகு. எல்லாப் புற்றுநோய்களுமே கலங்களிலிருந்தே (மாற்றம் பெற்ற) உருவாகும்.

உடலானது பலவகைக் கலங்களின் தொகுதியாகும். இக் கலங்கள் சாதாரண நிலையில் பிரிந்து பெருகி (கட்டுப்பாடான முறையில்) உடலை நல்ல நிலையில் பேணுவதற்கு உதவும். மற்றும் வயதான கலங்கள் செயற்பாடற்று இறக்கும். எப்படியாயினும் சில சமயங்களில் இவ்வாறான ஒழுங்கமைப்பு குலையலாம். கலங்களின் தொழிற்பாட்டிற்கும், பெருக்கத்திற்குமான டி. என். ஏ ஆனது மாற்றங்களுக்கு உள்ளாகலாம். இந்நிலையின் கலங்கள் சிறப்புற்று கட்டுப்பாடற்று பெருகும் தன்மையினைப் பெறலாம். இவ்வாறான நிலை தேவைக்கு அதிகமான கலக் கூட்டம் ஒரு கட்டியினை உருவாக்கும். எல்லாக் கட்டிகளும் புற்று நோயல்ல. ஆனாலும் அவை புற்றுநோயாக மாறலாம்.

ஒரு மனிதனுக்கு புற்றுநோய் உருவாகும் சந்தர்ப்பம் சில காரணிகளால் அதிகரிப்பதாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமானவை,

- வயதாதல்
- புகைப்பொருள் பாவனை
- சில இரசாயனங்களும் வேறு பொருட்களும்
- சில நுண்ணுயிர்கள்
- சூரிய வெளிச்சம்
- குடும்பத்தில் புற்றுநோய்த் தாக்கம் இருத்தல்
- மது பாவனை
- உடற்பருமன், உடற்பயிற்சியின்மை, தவறான உணவு முறை

இக் காரணிகளில் பெரும்பாலானவை விலக்கப்படலாம்.

புகைப்பொருட் பாவனை:

இதுவே தவிர்க்கப்படக்கூடிய காரணிகளில், மரணத்திற்கான பிரதான காரணியாக அமைவது. ஒவ்வொரு வருடமும் 180,000 அமெரிக்கர்கள் புகைப்பொருள் பாவனையால் ஏற்படும் புற்று நோயால் இறக்கின்றனர்.
புகைப்பொருள் பாவனையால் சுவாசப்பை, குரல்வளை, வாய், களம், இரைப்பை, சிறுநீரகம், கணையம் சிறுநீர்ப்பை

என பல பகுதிகளில் புற்றுநோய் உருவாக வாய்ப்புள்ளது.

புற்றுநோய் உருவாக்கம் எவ்வாறு ஏற்படலாம்?

1) உடலின் எப்பகுதியிலாவது கட்டி ∴ தடித்த பகுதி உருவாதல்
2) நீண்டகாலம் மாறாத புண்
3) குரல் மாற்றம் அல்லது நீண்டகாலம் மாறாத இருமல்
4) மல ∴ சலம் போவதில் மாற்றம் அல்லது இரத்தம் போதல்
5) விழுங்குதலில் கடினம் அல்லது சாப்பிட்டவுடன் கடினமாயிருத்தல்
6) காரணமின்றிய உடல் நிறை குறைதல்காரணமின்றிய
7) ஏதாவது பகுதியிலிருந்து வழமைக்கு மாறாக இரத்தம் போதல்

பெரும்பாலும் இவை சாதாரண காரணங்களாலும் உருவாகலாம். எனவே மருத்துவரை சந்தித்து ஆலோசனை பெறல் நலம்.

வருமுன் தவிர்த்தல் ∴ ஆரம்பநிலையில் அடையாளப்படுத்தல்:

புற்றுநோய்க் காரணிகளைத் தவிர்த்து ஆரோக்கியமான வாழ்க்கை முறையில் வாழ்தலே சிறந்தது.
சில புற்று நோய்களை ஆரம்ப நிலையிலிருந்தே கண்டறிந்து குணப்படுத்த முடியும். இதன் காரணமாக இவற்றிற்கான பரிசோதனைகளை ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டும்.

மார்பகப் புற்றுநோய்:

- பரிசோதனை மார்பக எக்ஸ்ரே (mammogramme)
- 40 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் ஒவ்வொருவரும் கட்டாயமாகச் செய்தல் வேண்டும்
  கர்ப்பப் பை கழுத்துப் புற்றுநோய்

பரிசோதனை **- (pap smear)**:

- 21 வயதிற்கு மேற்பட்ட அல்லது உறவுகொள்ளத் தொடங்கி 3 வருடத்தில் இப்பரிசோதனை
  குறைந்தது ஒவ்வொரு 3 வருடத்திற்கொருமுறை செய்தல் வேண்டும்.
  பெருங்குடற் புற்றுநோய் (colon & rectum)
- 50 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் தனது மருத்துவரிடம் ஆலோசனை பெற்று நீங்களும் சோதனை களை மேற்கொள்ள வேண்டும்.
  - Fecal occult blood
  - Sigmoidoscopy
  - Colonoscopy

யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலய

பழைய மாணவர் சங்கம் - கனடா

நெல்லைதீபம் 2010 அங்கத்தவர் பட்டியல்

ஆயுட்கால அங்கத்தவர்கள்

01.	திரு. குமாரசாமி சிவஞானம்	416.754.2494
02.	திரு. நாகலிங்கம் சிவயோகன்	416.999.5432
03.	திரு. தாமோதரம்பிள்ளை செல்வரத்தினம்	416.297.6508
04.	திரு. செல்வலிங்கம் செந்தில்குமரன்	416.278.5540
05.	திரு. வி. விஜேந்திரதாஸ்	416.726.1647
06.	திரு. நரசிங்கம் ஞானேந்திரன்	416.937.8090
07.	திரு. மணி வேலுப்பிள்ளை	416.284.5250
08.	திரு. ஆழ்வார் சீவரெத்தினம்	905.554.5725
09.	திருமதி. சிவனேஸ்வரி தேவகுமார்	416.282.8918
10.	திரு. சரவணமுத்து விநாயகமூர்த்தி	416.508.0370
11.	திரு. சுப்பிரமணியம் ரவீந்திரன்	416.756.9901
12.	திரு. கந்தையா அருளம்பலம்	416.261.1666
13.	திரு. என். மோகனதாஸ்	416.209.9670
14.	திருமதி. அருணா கிருக்ஷ்ணகுமார்	905.209.9670
15.	திரு. மாணிக்கம் மனோகரன்	905.201.1376
16.	திரு. பொன்னம்பலம் பாலராஜன்	905.420.9996
17.	திரு. எஸ். குணரட்ணம்	416.754.8296
18.	திருமதி. நளினி சிவயோகன்	416.999.3405
19.	திரு.சீவரெத்தினம் ஜெயானந்தகுமார்	905.472.5985
20.	திரு. கணபதிப்பிள்ளை வர்ணகுமாரன்	416.844.7390
21.	திரு. சோமசுந்தரம் விஜேந்திரன்	905.472.6450
22.	திருமதி. கஜேந்தினி ஜெயராஜன்	416.754.4144
23.	திரு. ஆறுமுகம் இராசரத்தினம்	905.471.4440
24.	திருமதி. ஜெயந்தி பரராஜசிங்கம்	416.438.9445
25.	திருமதி. குமுதினி சத்தியசோதி	905.201.9637
26.	திரு. சுப்பையா சத்தியசோதி	905.201.9637
27.	திரு. ஏரம்பமூர்த்தி விக்னேஸ்வரராஜா	416.896.1383
28.	திரு. சூடாமணி சாந்தகுமார்	416.893.8747
28.	திருமதி. சுமதி. சாந்தகுமார்	905.608.0817
29.	திரு. மார்க்கண்டு பத்மநாதன்	905.294.8365
30.	திரு. கதிரவேற்பிள்ளை வரதராஜா	416.302.2862
31.	திரு. சண்முகராஜா தயாபரன்	416.321.6969
32.	திரு. சுப்பிரமணியம் இராஜகணபதி	416.829.0970
33.	திரு. இராஜரத்தினம் தேவன்	416.438.1583
34.	திரு. நடராஜா ஜெயபாலன்	416.750.2358
35.	திரு. தேவராஜா இராசதுரை	416.999.3405
36.	திரு. மன்மதன் நமசிவாயம்	416.438.3517
37.	திரு. பாலகணேசன் முருகேசு	905.471.6921
38.	திரு. இராமதாஸ் குமரையா	416.616.4519
39.	திரு. திரவியம் நாகரத்தினம்	416.332.8738
40.	திரு. சிவஞானசுந்தரம் குமாரசாமி	416.283.6034
41.	திரு. கணபதிப்பிள்ளைதிருநாவுக்கரசு	416.412.3883
42.	திரு. சபா குலோத்துங்கன் (அமெரிக்கா)	1.410.560.6771
43.	திரு. பாலகுமாரன் திரவியம்	416.332.8738
44.	திரு. சுதாகர் வேலாயுதம்	905.417.8971
45.	திரு. காந்தரூபன் கார்த்திகேசு	416.291.3997
46.	திரு. பிரபுராஜ் செல்வராஜா	905.554.1714
47.	திரு. இராஜ்மோகன் புவனேந்திரன்	647.309.7790
48.	திரு. கிருக்ஷ்ணகுமார் சின்னத்துரை	905.209.9670
49.	திரு. ஆனந்தராஜா பாலசுப்பிரமணியம்	416.287.5414
50.	திரு. சிவயோகன் குமாரசாமி	905.607.2863
51.	திரு. இராஜேஸ்வரன் நடராஜா	416.666.1120
52.	திருமதி. பபிதா சிவராஜா	905.201.6857
53.	திருமதி தயாளினி விஜயதுங்கம்	905.201.8614
54.	திருமதி. இராஜேஸ்வரி சச்சிதானந்தம்	905.472.7742
55.	திரு. மதிரூபன் பொன்னம்பலம்	416.725.8242
56.	திரு. மதீஸ்வரன் தர்மலிங்கம்	905.497.6693
57.	திரு. கௌரிகாந்தன் சண்முகநாதன்	905.294.7429
58.	திரு. கெங்காதரன் சுப்பிரமணியம்	416.388.0920
59.	திரு. முருகேசு சிதம்பரப்பிள்ளை	416.284.7900
60.	திருமதி. மோகனாம்பிகை சிறீகாந்தநாதன்	416.267.6741
61.	திரு. புஸ்பானந்தன் கதிரேசு	514.624.9369
62.	திரு. ஸ்ரீஸ்கந்தராஜா இராஜதுரை	905.209.8384
63.	திருமதி. பவானி விஜேந்திரன்	905.472.6450
64.	திரு. மகாதேவன் செல்வராஜா	416.835.2604
65.	திரு. ஞானச்செல்வன் செல்வராஜா	905.251.8074
66.	திருமதி. தங்கம்மா செல்வராஜா	416.209.8384
67.	திரு. இராசதுரை கதிரவேலு	416.754.3850
68.	திரு. சுரேன்நாதன்	416.723.2204
69.	திரு. கணபதிப்பிள்ளை சண்முகநாதன்	416.287.6171
70.	திரு. தர்மலிங்கம் சிதம்பரப்பிள்ளை	416.455.3956
71.	திருமதி. தமயந்தி யோகேந்திரன்	416.444.4765
72.	திருமதி. சிவாஜினி பாலராஜன்	905.420.9996
73.	திரு. குலராஜேந்திரம் கந்தையா	416.286.0895
74.	திரு. அம்பிகாவரன் சிற்றம்பலம்	647.349.3525
75.	திருமதி சுவர்ணா குலசிங்கம்	416.332.8738
76.	திருமதி கவிதா ஜெயக்குமார்	416.284.4192
77.	திருமதி. சுமதி காந்தரூபன்	416.291.3997
78.	திருமதி. விஜயகுமாரி செல்வரத்தினம்	416.297.6508
79.	திரு. அனங்கன் கமலக்கண்ணன்	647.476.4066
80.	திரு. தவரூபன் கிருக்ஷ்ணர்	416.317.4212
81.	திரு. விக்னேஸ்வரன் ஐயாத்துரை	416.930.4600
82.	திரு. கனகசபை வீரகத்தி	416.297.7542
83.	திரு. தம்பிப்பிள்ளை செல்வராஜா	905.472.1908
84.	திரு. இளங்கோ செல்வராஜா	416.286.0895
85.	திருமதி. இராஜேஸ்வரி தர்மராஜா	416.298.8731
86.	திரு. இராஜசேகர் செல்வராஜா	416.724.6172
87.	திரு.மகாலிங்கம் வினாசித்தம்பி	416.609.0274
88.	திரு.நமசிவாயம் செல்வராஜா	416.289.2033

மாணவர் கற்றலில் பாடசாலைச் சமூகத்தின் பங்கு ~ ந. அனந்தராஜ்

ஒரு பாடசாலையின் வளர்ச்சி என்பது, முழுமையாக அதிபர், ஆசிரியர்களின் கைகளில் மட்டும் தங்கியிருப்பதில்லை என்பதை அண்மைக் காலத்தில் சிறந்த பாடசாலைகளாக இனங்காணப்பட்ட பாடசாலைகளின் வரலாற்றில் இருந்து அறிந்து கொள்ள முடியும்.

இன்று பாடசாலையின் கற்றல்-கற்பித்தல் கலைச்சாரமனது பாரம்பரிய முறையில் இருந்து நவீனத்துவம் நோக்கி திருப்பப்படுள்ள நிலையில், இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய கல்வி மறுசீரமைப்பானது பின்வருவனவற்றை இலக்காக கொண்டு வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

1 . அதிபர்களுக்கான அதிகாரங்களை அதிகரித்தல்
2 . பாடசாலைச் சமூகத்தின் ஈடுபாட்டை அதிகரித்தல்
3 . பாடசாலையின் வளர்ச்சிக்கும்,வீழ்ச்சிக்கும் அதிபருடன் சமூகமும் சேர்ந்து வகை கூறல் (accountablity)
4 . அதிபர் தனது பொறுப்புகளை ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தினரிடம் பகிர்ந்தளித்தல்.
5 . நிதிஈட்டத்தை மேம்படுத்தல், அவற்றை பயன்படுத்தும் அதிகாரத்தை பாடசாலை அபிவிருத்தி குழுவினரிடம் கையளித்தல்.
6 . பாடசாலைக் கல்வி நிலையை மேம்படுத்தும் திட்டங்களை செயற்படுத்துதல்
7 . கற்றல் செயல்பாட்டில் பின்வரும் எண்ணக் கருக்களை (concepts) அறிமுகப்படுத்துவதனூடாக கற்றல் விளைவுகளை (learning outcome) உயர்த்துதல்.
   1 . ஆசிரியர் மையக்கல்வியில் இருந்து மாணவர் மையக் கல்வியை ஏற்படுத்துதல் (From Teacher Centered Education to Student Centered Learning)
   2 . தேர்ச்சி மையக்கல்வி (Competency Based Edu cation)
   3 . செயற்பாட்டு அடிப்படையிலான கல்வி (Activity Based Learning)
   4 . வள அடிப்படையிலான கல்வி (Resource Based Education)

இந்த இலக்குகள் முழுமையாக எய்தப்படுவதட்கு கல்வித்திணைக்களம் அல்லது கல்வி அமைச்சின் உதவியை மட்டும் நம்பியிருக்கின்ற ஒரு பாடசாலையாக இயங்குவதானால் அது பத்தாயிரத்து ஐந்நூறில் ஒரு பாடசாலையாக மட்டுமே இருந்து ஒளி இழந்து போகும் நிலையில் இருந்து மீண்டெழும் தனித்துவமான பாடசாலையாக இயங்கவேண்டும்.

இவ்வாறு தனித்துவம் வாய்ந்த பாடசாலையாக, ஏனையவற்றை விட முன்னணிப் பாடசாலையாக பெயர் பெற்று விளங்க வேண்டுமாயின், அது பாடசாலைச் சமூகத்தின் வலுவூடலின் மூலமே சாத்தியப்படும். இங்கு பாடசாலைச் சமுகம் என்பது அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என்போருக்கு அப்பால் மிகவும் பலம் வாய்ந்த சக்திகளாகவும், ஊற்று கண்களாகவும் இருக்கும் பெற்றோர் மற்றும் பாடசாலையின் பழைய மாணவர்கள் ஆகியோரைக் கொண்டதாகும். அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் என்போர், அந்த பாடசாலையின் பாரம்பரியத்தை அறிந்த பழைய மாணவர்களாக அல்லது பழைய மாணவர்கள் இல்லாதும் காணப்படலாம். அவர்கள் அந்த பாடசாலையில் இருந்து பயனைப் பெறும் வகையில் தமது ஈடுபாட்டை கூட்டுவர் . ஆனால், ஒரு பாடசாலையின் பழைய மாணவர்கள் என்போர் அந்தப் பாடசாலையின் பாரம்பரியத்தையும் நடைமுறைகளையும் நன்கு அறிந்தவர்களாகவும், அதன் தேவைகளை உணர்ந்தவர்களாகவும் இருப்பார்.

அந்த வகையில் பழைய மாணவர் சங்கங்கள், தமது பாடசாலையின் வளர்ச்சியின் ஊற்று கண்களாக என்றென்றும் இருப்பார். அவர்கள் தொடர்ந்து நீண்ட காலத்திற்குத் தமது பாடசாலைகளைத் தாங்கி நிற்க முடியும்.

தர உள்ளீட்டு நிதி வழங்கலும், மிகை நிரப்பலும்.

பாடசாலைகளின் கற்றல்-கற்பித்தல் தேவைகளை நிறைவு செய்வதற்காக ஒரு பகுதி நிதி, தர உள்ளீட்டு நிதி (Quality Input Fund) என்ற பெயரில் ஒவ்வொரு மாகாண பாடசாலைக்கும் வருடா வருடம் அனுப்பி வைக்கப்படுகின்றது. இந்த நிதியானது மாணவர் தொகையை அடிப்படையாக கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. இவ்வாறு அனுப்பப்படும் நிதியில் குறைந்த நிதியாக 58000 ரூபாவில் இருந்து 80000 ரூபா வரை வழங்கப்படுகிறது. இந்த நிதியானது வகுப்பறை கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள், ஆசிரியர்களுக்கான உள்ளக பயிற்சி, மாணவர்கட்கான பயிற்சி, தளபாடத் திருத்தம், நுகர் பொருட்கள் மற்றும் நிரதந்தர பொருட்களின் கொள்வனவுக்குப் பயன்படுத்தபடலாம். ஆனால் அதிக வினைத்திறனுடன் செயல்படுவதற்கு போதுமானதாக இல்லை என்ற சிறந்த அதிபர்களின் ஆதங்கமும் நியாயமானதே. அத்தகைய இடைவெளியை நிரப்பும் பணியை பழைய மாணவர் சங்கங்களாலேயே நிரப்ப முடியும் என்பது உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் அதிபராகச் சேவையாற்றிய அனுபவத்தினூடாக கண்ட உண்மை. அதே போன்று வட மாகாணத்தின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றான யாழ் / நெல்லியடி மத்திய கல்லூரி அத்தகைய வளத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

பழைய மாணவர் சங்கத்தின் அர்ப்பணிப்பு

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், இன்று சிறந்ததொரு தலைமைத்துவத்தின் கீழ் முன்னேறி கொண்டிருகிறது என்பதில் அதிபர் திரு.செ.சேதுராஜா மற்றும் ஆசிரியர்கள் பெருமையும், மகிழ்ச்சியும் கொண்டாலும் அவர்களின் அந்த உயர்வின் முக்கிய காரணிகளாக பெருமைப்பட வேண்டியவர்கள், தாயகத்தில் இருக்கும் பழைய மாணவர் சங்கமும், பெற்றாரும், அவர்களுக்கு உறுதுணையாகச் செயற்பட்டு வரும் புலம் பெயர்ந்த நாடுகளில் இயங்கி கொண்டு இருக்கும் நெல்லியடி மத்திய மகா வித்தியால பழைய மாணவர் சங்கங்களே.

இன்று அக் கல்லூரியின் வளர்ச்சியில் பழைய மாணவர் சங்கமும், பெற்றாரும், இணைந்து பல அபிவிருத்திகளை முன்னெடுத்தாலும் அவற்றுள் பின்வரும் சிலசெயற்பாடுகளை சிறப்பாக குறிப்பிடலாம்.
1 . பாடசாலைச் சுழலை அழகாக மாற்றி அமைத்தமை
2 . விளையாட்டு மைதானத்திற்கான நிலத்தை கொள்வனவு செய்தமை
3 . விளையாட்டு உபகரணங்கள் வழங்கி விளையாட்டு துறையை ஊக்குவித்தமை.
4 . கணணி, பல்லூடக எறியி (Multi Media Projector) மற்றும் கற்றல் உபகரணங்கள் போன்றவற்றை வழங்கியமை

இவை முன்மாதிரியான சில செயற்பாடுகளாக விளங்குவதில் வடமாகாண கல்வி திணைக்களத்தின் பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்கு பொறுப்பான நிபுணத்துவ ஆலோசகராகக் கடமையாற்றும் ஒரு கல்வி அதிகாரி என்ற வகையில் நானும் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகேன்றேன் .

அந்த வகையில் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்பவர்கள் கற்ற பாடசாலையின் பெயரில் பழைய மாணவர் சங்கங்களை உருவாக்கி அவற்றினூடாக நிதி சேகரித்து தமது பாடசாலைகளின் வளர்ச்சியில் பல்வேறு உதவிகளை புரிந்து வருகின்றனர். ஆயினும் பல பழைய மாணவர்கள் சங்கங்கள் எவ்வகையில் அந்த நிதியை பயன் படுத்தலாம் என்பதில் சரியான தெளிவு இல்லாமல் இருப்பதையும் அறிய முடிகின்றது.

இதற்கு அவர்கள் செய்ய வேண்டியது, அந்த பாட-சாலைகளின், பாடசாலை அபிவிருத்தி குழுக்களுடன் (School Development Committee) நேரடியாக தொடர்புகொண்டு பாடசாலைகளின் தேவை-களை இனங்கண்டு, அவற்றை நிறைவு செய்யும் வகையில், தாய் சங்கத்திற்கு நிதியை அனுப்பிவைத்தல் வேண்டும்.

புலம் பெயர்ந்த நாடுகளில் இயங்கும் பழைய மாணவர் சங்கங்களால் பின்வரும் சேவைகளை ஆற்ற முடியும்

1 . வினைத்திறனுடன் சேவை ஆற்றும் அதிபர், ஆசிரியர்களை நேர்மனப் பாங்குடன் ஊக்குவித்தல்.
2 . பாடசாலையை உள்ளும், புறமும், அழகுபடுத்தும் வகையில் நல்ல கவிநிலையை ஏற்படுத்துதல்.
3 . பரிசளிப்பு விழாக்கள், மெய்வல்லுனர் போட்டிகள் மற்றும் துடுப்பாட்டம், கட்பந்தட்டம் போன்ற பெரு விளையாட்டுகளுக்கு தேவையான நிதி மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
4 . உயர் விலையுள்ள கற்பித்தல், கற்றல் சாதனங்களை பெற்றுகொடுத்தல்.
5 . விளையாட்டு மைதானம், விளையாடு உபகரணங்கள், கலையகம், சுற்றுமதில் போன்றவற்றிட்கன நிதி உதவிகள்.
6 . சிறந்த பெறுபேறுகளை பெறும் மாணவர்கள், மற்றும் வறுமை கோட்டின் கீழ் இருக்கும் மாணவர்களுக்கான நம்பிக்கை நிதியத்தை (Trust Fund) ஏற்படுத்துதல்.
இவை போன்ற பல அபிவிருத்தி செயற் திட்டங்களை பழைய மாணவர் சங்கங்கள் முன்னெடுக்க முடியும்.

அதேவேளை புலம் பெயர்ந்த பழைய மாணவர்கள், பாடசாலையின் பெயரில் பல்வேறு கலை நிகழ்சிகளை நடத்தி, அதிகளவிலான நிதியை செலவழித்து ஒன்று கூடல்களை நடத்தி முடித்துவிட்டு தாயகத்தில் உள்ள பாடசாலைகளை வெறுமைக்குள் தள்ளிவிடாமலும் பார்க்க வேண்டும். இன்று புலம் பெயர்ந்த மக்களிலேயே தாயகத்தில் உள்ள ஒவ்வொருவரும் எதோ ஒன்றுக்காக தங்கியிருக்கின்றனர் என்ற அந்த உண்மையை மறந்து விடக்கூடாது.

ஆயினும் பல்வேறு வேலைச்சுமைகள், கடுங்குளிர், அரசியல் நிர்பந்தங்களின் மத்தியில் தமது தாயத்திற்காக கடுமையாக உழைத்துவரும் புலம் பெயர் உறவுகளின் மகத்தான சேவைகள் மதிக்கப்பட வேண்டும்.

ந. அனந்தராஜ்
B A (Hons . M . A
Dip in Education ,
Dip in Journalism
SLPS - I
SLEAS I)
பாடசாலை மேம்பட்டு நிபுணத்துவ ஆலோசகர்
வட மாகாண கல்வித்திணைகளம்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் – கனடா
Nelliady Madhya Maha Vidyalayam Old Students Association – Canada
(இலாப நோக்கமற்ற அமைப்பு A Registered Non-Profit Organization ON Reg. OCN No. 1746090)
19 Canmore Blvd, Scarborough, ON M1C 3T3
www.nmmv.ca nmmv.canada@gmail.com

வருமானச் செலவுக் கணக்கு 2009-12-01 தொடக்கம் 2010-09-30 வரை

வருமானம்	$ - cts	செலவீனம்	$ - cts
திரண்ட நிதி (30-11-2009)	10,299-00	நெல்லியடி ம.ம.வி.உ.தொகை (அ) நிர்வாக பயிற்சியாளர்	2,010-00
நெல்லைத் தீபம் -2009 கலை நிகழ்ச்சி வருமானம்	3,669-00	(ஆ) பிரதி பண்ணும் இயந்திரம் (Photot Copy Machine)	5,016-00
ஒன்று கூடலும், விளையாட்டுப் போட்டியும் 2010 மேலதிக வருமானம்	106-00	ஒலிபெருக்கி, கயிறு	145-00
		இரங்கல் செய்தி(மாணிக்கம், விக்னேஸ்வரன் தாயார்)	145-00
		D.V.D, N.M.M.V. SPORTS பிரதி செலவு	30-00
		வங்கிக் கூலி	27.50
		மொத்தச் செலவு	7,373-50
		திரண்ட நிதி	6,700-50
	14,074-00		14,074-00

திரண்ட நிதிக் கணக்கு 01-10-2010ல்

விபரம்	$ - cts	விபரம்	$ - cts
திரண்ட நிதி 01-10-2010	6,700-50	வங்கி இருப்பு	5,133-16
		காசு இருப்பு	1,567-34
	6,700-50		6,700-50

நா. திரவியம்
பொருளாளர்
30-09-2010

Bank Detail:
Royal Bank of Canada
Sheppard and Markham Branch
5080 Sheppard Avenue East.
A/C 101-883-7 TRANSIT: 06492

VICS Mechanical Contracting Inc.	கலை விழா நுழைவு சீட்டு அன்பளிப்பு தொகை $500.00
G Plus Staffing Serevicing Inc.	அன்பளிப்பு தொகை $100.00
Suren Nathan AMP	அன்பளிப்பு தொகை $50.00
Mr & Mrs. Soothinathan	முதலாவது பரிசு அன்பளிப்பு
Rajmohan Puvanenthiran	2ம் 3ம் பரிசு அன்பளிப்பு